## இறுதிச் செபம்:

அதிச உறுப்பினர் ஒருவரை செபம் சொல்ல அழைக்கலாம்.

## முடிவு பாடல்:

# அன்பே கடவுள் என்றால்

அன்பே கடவுள் என்றால்
அன்புக்கு ஈடேது சொல்
அன்பே இன்பம் என்றால்
அன்புக்கு விலையேது சொல்

1. மண்ணோர்கள் மொழி பேசினும்
   அன்புக்கு ஈடாகுமா 2
   விண்ணோர்கள் மொழி பேசினும்
   அன்புக்கு ஈடாகுமா

2. இறைவாக்கு சொல் வரமும்
   அன்புக்கு ஈடாகுமா 2
   மறைபொருள் உணர்பொருளும்
   அன்புக்கு ஈடாகுமா

3. அளவில்லா அறிவுத் திறன்
   அன்புக்கு ஈடாகுமா 2
   மலை பெயர் விசுவாசமும்
   அன்புக்கு ஈடாகுமா



INTERNAL CIRCULATION ONLY

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

*Print:* Stenoprint Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio



# அதிசசிந்தனை

நம்பிக்கை:

## கிறிஸ்துவில் மற்றவர்களை மதிப்பது, உலகத்தோடு நட்புறவாடல்

**நோக்கம்:** லட்சியப் பணி

**நிகழ்வு:** அந்நியக் குடியேற்றக்காரர் ஞாயிறு



### அறிமுகம்:

இம்மாத சிந்தனை தாள், அந்நியக் குடியேற்றக்காரர்கள் மற்றும் அகதிகள் மீது கவனம் செலுத்துகிறது. “அந்நியத் தொழிலாளர்களையும் அகதிகளையும் வரவேற்று, பாதுகாத்து, இணைத்துக் கொள்” என்பது அந்நியத் தொழிலாளர்கள் மற்றும் அகதிகள் உலகத் தினத்திற்கு திருத்தந்தை தேர்வு செய்த கருப்பொருளாகும். கிறிஸ்துவர்கள் என்ற முறையில், “அவர்களை வரவேற்று, பாதுகாத்து இணைத்துக் கொள்வதற்கு ஆதரவாக பேசுவதற்கு நமக்கு பொன்னான வாய்ப்பு உள்ளது”. அனைவரிடமும் குறிப்பாக அரசியல் மற்றும் சமூகத் தலைவர்களுடன் இந்த செய்தியைப் பகிர்ந்து கொள்வோம்.

## தொடக்கச் செபம்:

செபம் சொல்ல அதிச உறுப்பினர் ஒருவரை அழைக்கலாம்

## ஆரம்பப் பாடல்:

### அன்பினில் பிறந்த இறைகுலம் நாமே

அன்பினில் பிறந்த இறைகுலம் நாமே
அன்பினைக் காத்து அறம் வளர்ப்போமே
அறம் வளர்ப்போமே 2

1. ஒரு மனதோராய் அனைவரும் வாழ்வோம்
அருள்ஒளி வீசும் ஒருவழி காண்போம் 2
பிரிவினை மாய்த்து திருமறை காப்போம் 2
இம்மையில் இறைவன் திருவுளம் காண்போம்

2. பிறப்பிலும் இயேசு இறப்பிலும் காட்டி
பெறுமை செய்தாரே புனிதப் பேரன்பை 2
பிறந்த நம் வாழ்வின் பயன் பெற வேண்டும் 2
பிறரையும் நமைபோல் நினைத்திட வேண்டும்

## உரையாடல்:

2018ம் ஆண்டு உலக அங்கியக் குடியேற்றக்காரர் மற்றும் அகதிகள் தினச் செய்தியில்; போர், சித்ரவதை, இயற்கை பேரிடர், வறுமை ஆகியவை காரணமாக ஓடி வரும் அகதிகளின் வறியநிலை குறித்து, திருநிலைப்படுத்தப்பட்ட தொடக்க ஆண்டுகளில் மிகவும் அக்கறை காட்டியதாக திருத்தந்தை குறிப்பிட்டுள்ளார். இதன் காரணமாக, அகதிகள், அங்கியத் தொழிலாளர்கள், புலம்பெயர்ந்த மக்கள், மனித கடத்தலில் பாதிக்கப்பட்டவர்கள் முதலியோர் மீது திருச்சபை அக்கறையைக் காட்ட, ஒருங்கிணைந்த மனித வளர்ச்சிக்கான குழுவை திருத்தந்தை அமைத்தார். இந்த அக்கறையும் கரிசனமும் அகதிகளின் பயண வரவிலும் திரும்புதலிலும் இருக்க வேண்டும் என திருத்தந்தை கூறினார். **ஆகவே அவர்களை வரவேற்று, பாதுகாத்து, இணைத்துக் கொள்வதன்** மூலம் திருச்சபை தனது ஒருமைப்பாட்டைக் காட்டலாம் என திருத்தந்தை குறிப்பிடுகிறார்.

**வரவேற்பு** – அகதிகளும் அங்கியத் தொழிலாளர்களும் செல்லும் நாடுகளுக்குப் பாதுகாப்பாகவும் சட்டப்பூர்வமாக செல்வதற்கு உதவுதல். மனிதாபிமான விசா முறையை எளிமைப்படுத்துவது, குடும்பங்களை ஒன்றிணைப்பது, சமூக ஆதரவுத் திட்டங்களுக்கு ஒத்துழைப்பது, அபாயச் சூழலில் இருக்கும் அகதிகளுக்கு மனிதாபிமான அடிப்படையில் வாய்ப்பு வழங்குவது, போர் காரணமாக நாட்டை விட்டு ஓடிவரும் அகதிகளுக்கு சிறப்பு தற்காலிக விசா வழங்குவது முதலியவை அவற்றில் அடங்கும்.

**பாதுகாத்தல்** – அகதிகள் மற்று புலம் பெயரும் குடியேற்றக்காரர்களின் உரிமையையும் சுயமரியாதையையும் தற்காக்கும் தொடர் நடவடிக்கைகள் தேவை. இந்த பாதுகாப்பு அவர்களின் சொந்த நாட்டிலிருந்து தொடங்கி, புறப்படுவதற்கு தேவையான நம்பகமான தகவல்கள் வழங்கி, சட்டவிரோதமான ஆள்சேர்ப்பு வலையில் சிக்கிக் கொள்ளாமல் இருப்பதற்கான பாதுகாப்பு வழங்குதல்,

**இணைத்தல்** – அகதிகள் மற்றும் குடியேற்றக்காரர்களின் வரவால் ஏற்படும் கலாச்சார மாற்றத்திற்கான வாய்ப்புகளின் எதிர்பார்ப்பு. இணைப்பு என்பது, தங்களது சொந்த கலாச்சார அடையாளத்தை குடியேற்றக்காரர்கள் மறந்து விட வேண்டும் என்பதில்லை. மாறாக மற்றவர்களும் தொடர்பு கொண்டு, அவர்களின் 'ரகசியத்தை' கண்டறிந்து மனம் திறந்து அவர்களை வரவேற்று, நட்புறவாடலுக்குப் பங்காற்றுவது.



### பகிர்வுக்கான கேள்வி

- நாட்டிலும் ஆயலத்திலும் அகதிகள் மற்றும் குடியேற்றக்காரர்கள் குறித்த மலேசியக் கத்தோலிக்க மக்களின் பொதுவான கருத்து என்ன என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?
- நமது பங்கில் அங்கியக் குடியேற்றக்காரர்கள் வரவேற்கப்படுகின்றனரா, உங்கள் கருத்து என்ன? ஆம் என்றால் எவ்வாறு? இல்லை என்றால் ஏன்?

## இறைவார்த்தை:

### லேவியர் 19:34

“உங்களிடம் தங்கும் அந்நியர் உங்கள் நாட்டில் பிறந்தவரைப் போல் இருக்க வேண்டும். உங்கள் மீது நீங்கள் அன்புகூர்வதுபோல் அவர் மீதும் அன்புகூருங்கள். ஏனெனில், எகிப்தில் நீங்களும் அந்நியர்களாய் இருந்தீர்கள்; நானே உங்கள் கடவுளாகிய ஆண்டவர்”

### சிந்தனை:

- வாசகத்தைப் படித்தப் பின் நமது உள்ளங்களில் கடவுள் பேசுவதற்கு மௌனம் காப்போம்.
- நமது உள்ளத்தைத் தொட்ட வார்த்தை அல்லது வசனம் பற்றிப் பகிர்ந்து கொள்வோம்.
- முற்போக்குவாதிகளையும் பழமைவாதிகளையும் கையாளும் போது நமது கிறிஸ்துவ அழைப்புக்கு எவ்வாறு நேர்மையாக இருக்க முடியும்?

(நீங்கள் ஓய்வாக இருக்கும் போது இந்த இறைவார்த்தை நினைவுகூர்ந்து பாருங்கள், கடவுள் மீது நம்பிக்கையையும் மன அமைதியையும் உணருவீர்கள்)

### செயல்:

- அகிச
- பங்கு
- சமூகம்

முதலியவற்றில் அகதிகள் மற்றும் அந்நியக் குடியேற்றக்காரர்களை வரவேற்று, பாதுகாத்து, இணைத்துக்